உண்மை நகல்:

## தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

கட்டிடங்கள் - அரசு அலுவலகங்கள் இயங்குவதற்கு வாடகைக்கு எடுக்கப்படும் தனியார் கட்டிடங்கள் - மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை வாடகை நிர்ணயம் செய்தல் - சில விளக்கங்கள் - ஆணை வெளியிடுதல்.

---

பொதுப்பணித் துறை

அரசாணை (நிலை) எண்.2043 நாள் 15.10.1987

பார்வை:-

(1) அரசாணை நிலை எண்.753, பொதுப்பணித்துறை, நாள் 7.4.1984.
(2) பொதுப்பணித்துறை தலைமைப்பொறியாளர் (கட்டிடங்கள்), கடித எண்.சிடிஒ/பி/13934/83-17, நாள் 12.9.84
(3) தலைமைப்பொறியாளர் (கட்டிடங்கள்) கடித எண்.சிடிஒ/பி/168944/85(சிஆர்)நாள் 30.10.1985.

- - - --

**ஆணை:**

அரசு அலுவலகங்களுக்கு வாடகைக்கு எடுக்கப்படும் தனியார் கட்டிடங்களுக்கு அவ்வப்போது நிலவும் விலைவாசிக்கேற்ப மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை வாடகையை உயர்த்திக் கொடுப்பது பற்றி பார்வை ஒன்றின் கண்ட அரசாணை (நிலை) எண்.753, பொதுப்பணித்துறை, நாள் 7.4.1984ல் வெளியிடப்பட்டது.

2. மேற்படி அரசு ஆணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின் சம்பந்தமாக தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) அவர்கள் எழுப்பியுள்ள விளக்கங்களுக்குக் கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

(1) அரசு அலுவலகங்கள் இயங்குவதற்கான வாடகைக்கு எடுக்கப்பட்ட தனியார் கட்டிடங்களின் வாடகையை மறு நிர்ணயம் செய்வதற்குப் பிறப்பிக்கப்பட்ட அரசாணை நிலை எண்.753, பொதுப்பணித்துறை, நாள் 7.4.1984, அரசு துறைகளால் அதன் பல்வேறு உபயோகத்திற்கு வாடகைக்கு அமர்த்தப்பட்டு, பொதுப்பணித்துறை பொறியாளர்களால் நியாய வாடகை (Reasonable rent) நிர்ணயம் செய்யப் படுகிறது மாநிலம் முழுவதும் உள்ள அனைத்துக் கட்டிடங்களுக்கும் பொருந்தும்.

(2) அரசாணை நிலை எண்.753, பொதுப்பணித்துறை, நாள் 7.4.1984ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணை 1960ஆம் வருடத்திய தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் வாடகைக்கு எடுக்கப்படும் தனியார் கட்டிடங்களுக்குப் பொருந்தாது.

(3) அரசாணை (நிலை) எண்.753, பொதுப்பணித்துறை, நாள் 7.4.1984 பிறப்பிப்பதற்கு முன்பு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு, மூன்றாண்டுகள் முடிவடைந்த கட்டிடங்களுக்கு அரசாணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து (7.4.84) வாடகையை மறு நிர்ணயம் செய்வதற்கும் 7.4.1984க்குப், பின்பு மூன்றாண்டுகள் முடிவடையும் கட்டிடங்களுக்கு எந்த தேதியில் மூன்றாண்டுகள் முடிவமைகிறதோ அந்த தேதியிலிருந்து மறு நிர்ணயம் செய்யலாம்.

3, இந்த ஆணை சட்டம் மற்றும் நிதித்துறைகளின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. சட்டத்துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 20968/86, நாள் 12.8.1986 மற்றும் நிதித்துறை அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 98551/பொ.ப.துறை/86-1, நாள் 10.1.1987.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ.சு. பாண்டியன்
ஆணையர் மற்றும் அரசு செயலர்.

மேற்குறிப்பு எண். 95000/ஆ1/87,
நாள்: 26.11.1987.

ஆராய்வாளர் அலுவலகம்,
சென்னை. 2.

நகல் வகை 111ன்படி அனைத்து அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

ஓம்/கே. எஸ். கோமதிநாயகம்,
உதவி ஆராய்வாளர் (பணி).

/உண்மை நகல்/

கண்காணிப்பாளர்.

கோஅ/5/1